**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 119/2023**

**02.06.2026.**

**PW- 1**

**வா.சா.1/அன்பரசன், த/பெ. செங்குட்டுவன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

நான் சென்னையில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு கடனை தவிர பிரதிவாதிக்கும் எனக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது என்றால் - சரிதான். பிரதிவாதி எனது மைத்துனரின் வகுப்பு தோழர். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் - ONGC காரைக்காலில் பணிப்புரிந்து 2022 ல் ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பணம் வட்டிக்கு கொடுத்து வாங்கி வருகிறேனா என்றால் - இல்லை. நான் முறையாக வருமான வரி செலுத்து வருகிறேனா என்றால் - செலுத்து வருகிறேன். பிரதிவாதி என்ன தேதியில் என்ன தேவைக்காக என்னிடம் பணம் வாங்கினார்என்றால் - தக்காளி வியாபாரம் செய்வதற்காக 06.03.2023 ல் பணம் கொடுத்தேன். அதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தொகை கேட்டிருந்தார். ரூ.9 இலட்சத்தை நான் வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால் -இல்லை. ரூ.9 இலட்சத்தை பிரதிவாதிக்கு கொடுப்பதற்காக கையில் வைத்திருந்தேன் என்றால் - இல்லை. எனது மகளின் திருமணத்திற்காக தொகையை கையில் சேர்த்து வைத்திருந்தேன். 1 மாதத்திற்கு முன்பு எனது மகளுக்கு திருமணம் நடைப்பெற்றது. பிரதிவாதி கேட்பார் என்று எடுத்து வைக்கவில்லை. ரூ.9 இலட்சத்தை சென்னையில் வைத்து கொடுத்தேனா என்றால் - இல்லை. மன்னார்குடியில் உள்ள எனது மாமனார் வீட்டில் வைத்து பிரதிவாதிக்கு வழக்கு கடன் தொகையான ரூ.9 இலட்சத்தை கொடுத்தேன். புரோ நோட்டு எழுதி வாங்கிக்கொண்டு தான் கடன் கொடுத்தேன் என்றால் - அவராகதான் எழுதிக்கொடுத்தார். புரோ நோட்டில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் - யார் போட்டுள்ளார்கள் என்று தெரியவில்லை. பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விவரம் யார் யாருக்கு தெரியும் என்றால் - எனது மைத்துனரின் நண்பருக்கு தெரியும். வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் நான் சொன்னதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் - சரிதான். ரூ.9 இலட்சம் பணம் கொடுத்த அன்று தான் புரோ நோட்டு மற்றும் செக் கொடுத்தாரா என்றால் - புரோ நோட்டு மட்டும் தான் கொடுத்தார். அதன் அடிப்படையில் தான் கடன் கொடுத்தேன். புரோ நோட்டு அடிப்படையில் கடன் கொடுத்திருந்தால் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் யார் யார் என்று தெரிந்திருக்கும் என்றால் - சரியல்ல. பிரதிவாதியிடம் பணம் எத்தனை முறை கேட்டேன் என்றால் - போனில் பலமுறை கேட்டுள்ளேன். நேரில் 2 முறை கேட்டுள்ளேன். வழக்கு காசோலை எந்த தேதியில் என்னிடம் பிரதிவாதி கொடுத்தார் என்றால் - 18.04.2023 ம் தேதிக்கு முந்தைய நாள் என்னிடம் கொடுத்தார். நான் 18.04.2023 ம் தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்தேன். பொதுவாக செக் வசூலுக்கு யார் பெயருக்கு காசோலை கொடுக்கப்பட்டதோ அவர் பெயரில் உள்ள வங்கி கணக்கில் தான் வசூலுக்கு தாக்கல் செய்வார்கள் என்றால் - சரிதான். நான் காசோலையை பிரதிவாதியின் வங்கி கிளையில் தாக்கல் தான் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் - இந்தியன் வங்கியிலும் எனக்கு கணக்குள்ளது. பிரதிவாதி கணக்கு வைத்திருக்கும் இந்தியன் வங்கியிலேயே எனக்கும்

கணக்குள்ளதால் நேரடியாக அந்த வங்கிக்கு சென்று வசூலுக்கு தாக்கல் செய்தேன். காசோலை ரிட்டன் ஆனதும் பிரதிவாதியை கேட்டேனா என்றால் - கேட்டேன். கூடிய விரைவில் கொடுத்துவிடுவதாக சொன்னார். இந்த விவரத்தினை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் - இல்லை. பிரதிவாதிக்கு பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பினோ என்றால் - இல்லை. வழக்கு கடனுக்காக பிரதிவாதி காசோலை கொடுத்திருந்தால் காசோலை பணமாக்கப்படாமல் திருப்பப்பட்டவுடனேயே அதுக்குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பனே் என்றாலும் வழக்கு கடனுக்கும் காசோலைக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் - சரியல்ல. புரோநோட்டு எழுதிக்கொடுத்து பணம் வாங்கியிருந்தால் அதன் அடிப்படையில் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து அவருக்கு சொந்தமான சொத்தை தீர்ப்புக்கு முன்பு ஜப்தி செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கலாம் என்றால் - புராமிசரி நோட்டை வாங்கிக்கொண்டுதான் செக் கொடுத்தார். பிரதிவாதி உண்மையிலேயே புரோநோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கியிருந்தால் நான் புரோ நோட்டு அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் - சரியல்ல. எனக்கு சென்னை ராயப்பேட்டை பீட்டர்ஸ்ரோடு இந்தியன் வங்கியில் கணக்குள்ளது என்றால் - சரிதான். அதன் கணக்கு எண் 403437294 ஆகும். 2014 ம் ஆண்டு முதல் 2018 வரையிலான காலக்கட்டத்தில் பிரதிவாதி மாதம் ரூ.25 ஆயிரத்திற்கு மேல் செலுத்தியுள்ளாரா என்றால் - தவணை முறையில் கொடுத்தார். நண்பருக்காக வாங்கிய பணத்தை கொடுத்தார். அந்த நண்பரின் பெயர் நினைவில்லை. பிரதிவாதி தான் என்னிடம் 2014 ம் ஆண்டு பணம் வாங்கினார். அந்த பணத்தை முழுவதுமாக கொடுத்து தீர்த்துவிட்டார். பிரதிவாதிக்கு சொந்தமாக மன்னார்குடி தாலுக்கா குமாரபுரம் கிராமம் தீபலெட்சுமி நகரில் 2714 சதுரடியில் நிலம் சொந்தமாக இருந்தது என்றால் - அவர் நிலம் இருப்பதாக சொல்லியுள்ளார். அந்த நிலத்தை நான் குறைந்த விலைக்கு கேட்டு அதனை பிரதிவாதி மறுத்தார் என்றால் - சரியல்ல. பிரதிவாதி மேற்படி நிலத்தை எனக்கு குறைந்த விலைக்கு கொடுக்க மறுத்ததால் காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமாக இருந்த மேற்படி சொத்தை தீர்ப்புக்கு முன்பு பற்றுகை உத்தரவு பெற்றுள்ளேன் என்றால் - சரிதான். 06.03.2023 ம் தேதியன்று பிரதிவாதி என்னிடம் ரூ.9 இலட்சம் கடனாக பெறவில்லை என்றாலும் வழக்குமூலம் உருவாக்கவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. உண்மையை மறைத்து கறை படிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளேன் என்றால் - சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN
Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 17:43:38 +0530

சார்பு நீதிபதி
மன்னார்குடி.